| | | |
|---|---|---|
| சாட்சி : DW 1<br>சேகர் | அ.வ.எண். 58/2005 | 29.11.2024 |

<u>குறுக்கு விசாரணை</u>

1) எனக்கு என்ன தொழில் என்றால் லாரி பட்டறையில் வேலை செய்து வருகிறேன். நான் வேலை செய்யும் இடத்திற்கும் தாவா சொத்திற்கும் 45 கி.மீட்டர் தூரம் இருக்குமா என்றால் இருக்கும். எனது தொழிலை பொறுத்த வரை தினமும் வேலை செய்யவேண்டும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை எனது பிரமாண வாக்குமூலம் மற்றும் சான்றாவணங்களில் எந்த தவறும் இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் நடவடிக்கையில் நான் நேரடியாக கலந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 சொத்து விபரத்தில் இனாம் புஞ்சை என்று கண்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு அல்லது முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண்.55/2016 வழக்கிற்கு பின்னிட்டு தாவா சொத்து குறித்து இனாம் புஞ்சையின் இனாம் Fair Register வாங்கி பார்த்தேனா என்றால் வாங்கி பார்த்தேன், தற்போது நியாபகம் இல்லை.

2) இந்தவழக்கிற்கு பின்னிட்டு தாவா சொத்தை பொறுத்த பட்டா பார்த்தேனா என்றால் இல்லை. தாவா சொத்தை பொறுத்த கணினிப்பட்டா அ பதிவேடு உள்ளிட்ட ஆவணங்களை பார்த்தேனா என்றால் இல்லை. ஒரு ஆவணம் எழுதவேண்டும் என்றால் மூலஆவணங்கள் அல்லது பட்டா இணைக்க வேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் மூல ஆவணங்கள் இருப்பதாகவோ பட்டா, பட்டா எண் குறிப்பிட்டோ எந்த சங்கதிகளும் இல்லை என்றால் சரிதான். சட்டப்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை நிறைவேற்ற சுப்பையாபிள்ளை வகையறாவிற்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

3) குமாரசாமி ஆசாரியாரின் மகள் தான் பாக்ககியத்தம்மாள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் 3 வது தாளில் எங்கள் சமூகத்தினரால் தர்ம காரியங்களுக்காக நாளது தேதி வரை எந்த கட்டிடமும் கட்டப்படவில்லை ஆதலாலும் உற்சவ காலங்களில் எந்தவிதமான தர்மமும் நடத்தவில்லை ஆதலாலும் சொத்துக்களும் நாளது வரை என்னுடைய அனுபவத்திலும் இருந்து வருகிற படியாலும் மேற்படி சொத்துக்களும் மேற்படியார்கள் பெயரால் பட்டா முதலானவை மாறாமலும் என் பெயரில் இருந்து வருகிற படியாலும் மேற்படி செட்டில்மெண்ட் பத்திரம் அமலுக்கு வரவில்லை ஆதலாலும், என்னுடைய ஜீவனத்திற்கே சிரமமான ஏழ்மையான நிலையை கருதியும் மேலே கண்ட செட்டில்மெண்ட் பத்திரம் அமலுக்கு வரவில்லை ஆதலாலும் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அமலுக்கே வராத தான செட்டில்மெண்ட் ஆவணத்தை ஒப்புக்கொண்டு தான் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் 3 வது ரசீதில் விஸ்வகர்ம மகாஜன சங்க சத்திரம் என்று கண்டுள்ளது என்றால் சரிதான்.

4) சங்கங்கள் பதிவு சட்டம் இருப்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி சங்கங்கள் பதிவு சட்டப்படி மேற்படி சங்கத்தை பதிவு செய்துள்ளேனா என்றால் முன்னாள் தலைவர் பதிவு செய்துள்ளார் நான் பதிவு செய்யவில்லை. முன்னாள் தலைவர் எந்த தேதி மாதம் வருடம் எந்த பதிவாளர் அலுவகத்தில் பதிவு செய்தர் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தின்படி அதில் கண்டுள்ள சொத்து சங்கமா அல்லது அறக்கட்டளை தர்மஸ்தாபனமா என்று சொல்லமுடியுமா என்றால் தர்மஸ்தாபனம் தான். தர்மஸ்தாபனத்தை

பொறுத்து சங்கம் என்று குறிப்பிட்டிருந்தால் அது தவறானது என்றால் அதுபற்றி தெரியாது.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக 04.12.2024 அன்று ஒத்திவைக்கப்படுகிறது)